2016

No. of Printed Pages : 3

2016 401600

**5956**

Register Number

முதலாம் ஆண்டு

# கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

**First Year**

# FACILITATING AND ENHANCING LEARNING

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

I. **அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**15x2=30**

1. புற ஊக்கம் என்றால் என்ன?

2. அக ஊக்கத்தைப் பேணி வளர்க்க ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை யாவை?

3. செயல் விளக்க முறை என்றால் என்ன?

4. கற்பித்தல் - கற்றலில் விளையாட்டு முறையை மாணவர்கள் விரும்புவதற்கான காரணங்களைக் கூறுக.

5. வேலைக்கும், விளையாட்டுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

6. தானே கற்றல் என்றால் என்ன?

7. கணினி வழிக் கற்றலில் ஆசிரியரின் பங்கு என்ன?

8. செய்தித் தொடர்பு நிகழும் முறைகள் எத்தனை? அவை யாவை?

[ Turn over

9. ''அனைத்து வழி செயதித் தொடர்பு'' என்றால் என்ன?

10. ஆசிரியர் - மாணவர் இடையேயும், மாணவர்-மாணவரிடையேயும் சிறந்த செய்தித் தொடர்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் நான்கினைக் கூறுக.

11. மேலோட்டமான கற்றல் என்றால் என்ன?

12. ஆக்கச் சிந்தனையால் மாணவர் பெறும் பயன்கள் நான்கினைக் கூறுக.

13. ஆழக் கற்றல் அணுகுமுறையில் படித்துப் பழகும் மாணவர்களின் கற்றல் பண்புகளைக் கூறுக.

14. போட்டிக் கற்றல் என்றால் என்ன?

15. குழுக் கலந்துரையாடல் மூலம் விளையும் நன்மைகள் யாவை?

## பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 10x4=40

16. கவனத்தின் வகைகளை கூறி விளக்குக.

17. மிகையான கவலையினால் மாணவர்களுக்கு கற்றலில் ஏற்படும் விளைவுகளைக் கூறுக?

18. செயல்வழிக் கற்றலின் பயன்கள் யாவை?

19. கண்டறி முறையை வகுப்பறையில் பயன்படுத்துவது விஞ்ஞானிகளை உருவாக்க வழிவகுக்கும் என்பதை விளக்குக.

20. ஒப்பார்குழு அமைத்தலில் கருத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

21. சூழரங்கம் என்றால் என்ன? விளக்குக.

22. இருவழிச் செய்தித் தொடர்பினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. விளக்கம் அளிக்கும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைக் கூறுக.

24. உயர்நிலைச் சிந்தித்தல் மாணவரின் கற்றலுக்கு அவசியமாகிறது - ஆராய்க.

25. திறனாய்வுச் சிந்தனையின் கல்விப் பயன்கள் யாவை?

26. புலன்கள் கற்றலில் எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.

27. கூட்டுறவுக் கற்றலின் பொதுவான அணுகுமுறை நான்கினை எழுதுக.

## பகுதி - இ

III. கீழ்க்கண்ட மூன்று வினாக்களுக்கு விடையளி. ஒவ்வொன்றிற்கும் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x10=30**

28. (அ) ஊக்கத்தை அதிகரிக்கும் உத்திகளையும், ஊக்கத்தை பேணி வளர்க்கும் காரணிகளையும் கூறுக.

**அல்லது**

(ஆ) செயல்திட்ட முறையைக் கொண்டு நீர்மாசுபடுதல் பாடப்பகுதியை பகுத்தாய்க.

29. (அ) ''அறிவியல் முன்னேற்றம் பண்பாட்டுக்குத் துணை நிற்கிறதா, பாதிக்கிறதா?'' என்ற தலைப்பில் பட்டிமன்ற முறையினை விளக்கி கருத்துக்களை தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) விளைவுறு செய்தித் தொடர்பின் சிறப்பியல்புகள் யாவை?

30. (அ) அறிவறிதலின் கல்விப் பயன்களைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

(ஆ) இணைந்து கற்றல் ஒரு குழந்தையின் கற்றலை எவ்வாறு மேம்படுத்தும் என்பதைத் தொகுத்து எழுதுக.

-o0o-